**திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் – திரு.பெ.இரவிச்சந்திரன், எம்.எஸ்ஸி., எம்.ஏ.எம்.எட்.,**
**ந.க.எண்.6851/அ1/2024 நாள்: .02.2025**

பொருள்: பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருவள்ளூர் மாவட்டம் - பொன்னேரி கல்வி மாவட்டம் – பொன்னேரி, மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி), இளநிலை உதவியாளர் திரு.பா.பரணிதரன் என்பவருக்கு 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண் 151, பள்ளிக் கல்வி (S.E.1 (1) துறை, நாள் 09.09.2022.
2. திருவள்ளூர், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண் 5930/அ1/2023, நாள் 27.09.2023.
3. பொன்னேரி, மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண் 3719/அ1/2024, நாள் 17.12.2024.

------

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி கல்வி மாவட்டம், பொன்னேரி, மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி), இளநிலை உதவியாளர் திரு.பா.பரணிதரன் என்பவருக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் Group IV மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு இளநிலை உதவியாளராக 29.09.2023 முற்பகல் முதல் நியமனம் பெற்று பணிபுரிந்து வருகிறார். பார்வை 3ல் காணும் கருத்துருவின்படி இளநிலை உதவியாளர் பதவியில் 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க செய்யக்கோரும் கருத்துரு பொன்னேரி, மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) அவர்களின் பரிந்துரையின்படி பெறப்பட்டுள்ளது. இளநிலை உதவியாளர், திரு.பா.பரணிதரன் என்பவரின் அனைத்து கல்விச்சான்றுகள் உண்மைத்தன்மை பெறப்பட்டு உண்மைத்தன்மை விவரம் சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

திரு.பா.பரணிதரன், இளநிலை உதவியாளருக்கு தற்போது அரசாணை எண்.151, பள்ளிக்கல்வி SE 1(1), துறை நாள்.09.09.2022-இன்படி முதன்மைக்கல்வி அலுவலருக்கு நியமன அலுவலராக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலும், கீழ்க்காணும் பணியாளருக்கு மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டிற்குள் தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும் எனத் தெரிவித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 31(4)ல் தெரிவித்துள்ளவாறு தகுதிகாண் பருவகாலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறைநூல் தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி முடிக்கப்படல் வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாகிறது.

| வ.எண் | பெயர்/பதவி/பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.பா.பரணிதரன்<br>இளநிலைஉதவியாளர்,<br>மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி),<br>பொன்னேரி | 29.09.2023<br>முற்பகல் | 29.09.2023<br>முற்பகல் |

மேற்காண் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து மேற்காண் பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

இணைப்பு: பணிப்பதிவேடு

முதன்மைக் கல்வி அலுவலர்
திருவள்ளூர்

பெறுநர்

சம்பந்தப்பட்ட பணியாளர் (சார்ந்த அலுவலர் வழியாக)

படி - மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கக் கல்வி),பொன்னேரி

படி – கோப்புக்கு